ஆக, த்வஜஸ்தம்பமும் சிவலிங்கத்தைப் போலவே ஸகல நிஷ்கல ஸதாசிவனையும் அவருடைய பஞ்சக்ருத்யங்களையும் குறிக்கும்: ஆனால் த்வஜஸ்தம்பத்தின் நான்கில் ஒரு பாகமான வட்ட-மேற்பகுதி, சிவனின் எல்லையற்ற விஸ்தாரத்தையடையும் சக்தி-யைக் குறிப்பதாகும் என்பதே லிங்கத்திற்கும் த்வஜஸ்தம்பத்-திற்க்கும் உள்ள வேற்றுமையாம். மேலும் த்வஜஸ்தம்பத்தை உட-லாக உருவகப்படுத்துவதையும் ஆகம நூல்கள் விவரிக்கின்றன. (உத்தர)காரணாகமத்தின்படி உச்சியில் குவிந்தபகுதி தலையுச்சி-யாகவும், தண்டம் முகமாகவும், இரு கயிறுகளும் கைகளாகவும், கொடியிலுள்ள தர்ப்பைக்கட்டு கறுத்த சடையாகவும், துணி தோலாகவும், அடிமேடை கடவுளின் பீடமாகவும் கொள்ளப் படும். த்யான ச்லோகத்தில் இது தெளிவாகும். மேலும், த்வஜ-படத்திலுள்ள வ்ருஷபம் மும்மலங்களுடன் கூடிய ஆத்மா என-வும், அரனிடமிருந்து பிரியாத திருவருட்சக்தியின் கருணையா-லல்லாது ஆத்மா சிவனுக்கு நெருங்கிய (சிறிதே தாழ்ந்த) சம நிலையையடையவியலாது என்பதும் பெறப்படும். இச் சக்தி கொடியை ஏற்ற உபயோகப் படுத்தப்படும் கயிறே ஆகும். ஸ்தம்பத்தைச் சுற்றி கட்டப்படும் தர்ப்பைக் கயிறு மும்மலங்க-ளாகிய பாசங்களையும் அவற்றிலும் முக்கியமாக ஆணவமலத்தை-யும் குறிக்கும். எந்த நூல்களிலும் சொல்லப்படாவிடினும், ஆரோஹணத்தில் மேல்நோக்கி கொடி செல்லும் வழியான ஆறு வளையங்கள் மூலாதாரத்திலிருந்து ஆயிரம் இதழ் கொண்ட ஸஹஸ்ராரம் வரைஉள்ள உடலின் ஆறு சக்கரங்களைக் குறிப்பது வெளிப்படை.

த்வஜஸ்தம்பத்தின் ஸ்வரூபமும் வருடந்தோறும் நிகழும் த்வஜாரோஹணக் கிரியைகளும் த்வஜஸ்தம்பத்திற்க்கும் கருவறையிலுள்ள லிங்கத்திற்க்கும் அமைப்பிலும் செயலிலும் உள்ள ஒற்றுமையைக் காட்டுவனவாம். கருவறையிலுள்ள லிங்-கத்தின் ஸூக்ஷ்மம் த்வஜஸ்தம்பத்தில் தெளிவாகக் காணப்படும். ஆகமங்களின்படியும் சைவசித்தாந்தத்தின்படியும் மோக்ஷமென்-பது பசுவான ஆத்மாவானது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு ஸாதனங்களால் பாசங்களை நீக்கி படிப்படியாக ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம் ஆகிய நிலைகளைக்கடந்து சிவஸாயுஜ்யத்தை அடைவதேயாம். இதற்கு இன்றியமையாதது

'தீக்ஷை'. மஹோத்ஸவத்தின் போது பரமனே பசுக்களான ஜீவர்கள்பால் கருணைகொண்டு இறங்கி வந்து அவர்களை உய்விக்கிறான் என்று கருதப்படுகிறது, ஆகவே மஹோத்ஸவமே 'சாம்பவி தீக்ஷை' என்று கூறப்படுகிறது.

தீக்ஷையில் முக்கியமான பத்து வகை உள்ள செயல்களை மஹோத்ஸவத்தில் நிகழும் யாகம், வாஹன ஊர்வலம் முதலியவை குறிப்பவை என்று யோகஜதந்த்ரம் கூறும்.

முற்கூறிய கருத்துக்கள் எல்லாம் உமாபதி சிவாசாரியர் சிதம்பரத்தில் கொடியேற்று விழாவில் கொடி ஏறத் தடங்கல் இருந்தபோது இயற்றிய அழகிய 'கொடிக்கவி'யில் விளங்குகின்றன. முற்கூறியவற்றுடன, த்வஜஸ்தம்பம் மேலும் மந்த்ர-த்யானம், ப்ராணயாமம் முதலியவற்றுடன் சித்சக்தியாம் குண்டலினியை ப்ரஹ்மரந்த்ரத்தில் (தலையின் உச்சியில்) ஆயிரம் இதழ் கொண்ட தாமரையில் ஸதாசிவத்துடன் இணைக்கும் யோகமுறையையும் குறிக்கும். மூச்சையடக்கிய வேறு எண்ணமற்ற நிலையில் (இது அந்தர்யாகமெனப்படும்), குண்டலினி எழுச்சி பெறுவதுடன் ப்ராணசக்தி ஸுஷும்ன நாடி வழியாக பரமாகாசமான த்வாதசாந்தத்தை அடைகிறது என்று ஆகமங்கள் கூறும்.

யோகநிலையில் சிவன் நாதமாகவும், சக்தி குண்டலினியாகவும், ஆத்மா ப்ராணனாகவும், மூலாதாரத்தில் கும்பக நிலையில் மணிபூரகத்தில் ஹோமத்தையும் அனாஹதத்தில் (ஹ்ருதயத்தில்) பூஜையையும், ஆஜ்ஞா சக்ரத்தில் த்யானத்தையும் அடைகின்றன. உடலிலுள்ள இந்த நுண்ணிய பாகங்கள் சிறந்த க்ஷேத்ரக் கோயில்களுடன் (திருவாரூர் மூலாதாரமாகவும, சிதம்பரத்திலுள்ள சித்ஸபை அனாஹதமாகவும், வாராணஸி ஆஜ்ஞா சக்ரமாகவும்) ஒப்புமை கொண்டனவாகக் கருதப்படுகின்றன.

இந்த யோக தந்த்ரமுறை முழுவதுமே த்வஜஸ்தம்பத்தில் அடங்கியதாகவும் கொள்ளப்படும். இவ்வாறு மேலும் த்வஜஸ்தம்பம் ஸுஷும்ன நாடியாகவும் அதன் அடிபீடம் குண்டலினியாகவும் குறிப்புப்பெறும். த்வஜஸ்தம்பத்திலுள்ள ஆறு வளையங்களும் இக்குறிப்பீட்டை வலுப்படுத்தும். திருமந்த்ரம் அண்டம், பிண்டம், ஸதாசிவம் முதலிய ஆறு லிங்கங்களைக் குறிப்பிடுவதும் மானுட உடலே சிவலிங்கமென்பதும், சிதம்பரம் என்பதும் அதனுள் ஐம்புலன்களால் பூஜை செய்யப்படுகிறதென்-

பதும் இக்கருத்துக்கு அனுகூலமாக உள்ளது. தீக்ஷை பெற்ற ஸாதகன் குருவினால் உபதேசிக்கப்பெற்ற சிவபஞ்சாக்ஷரீ (நமச்-சிவாய) மந்த்ரத்தின் உட்கருத்துகளை அறியவேண்டும். இம் மந்திரம் நான்கு விதங்களில் ஜபம் செய்யப்படும். 'சி என்பது சிவனையும் 'வ' சிவனுடன் சேர்ந்து நாதத்தை உண்டாக்கும் பராசக்தியையும் குறிக்கும். ந, ய, ம என்பவை திரோதான சக்தி, ஆன்மா, மலம் இவற்றைக் குறிக்கும், பஞ்சாக்ஷரீ மந்த்ரம் உட்பொருளிற்கேற்ப ஸ்தூலம், ஸூக்ஷ்மம், அதிஸூக்ஷ்-மம் என மூவகைப்படும். சரியான த்யான உச்சாரணத்துடன் கூடிய பஞ்சாக்ஷரியின் 'சி' எனும் உள்ளடங்கிய, வெளிப்படா ஒலி மூலாதாரத்திலிருந்து முறையாக ஆஜ்ஞா சக்ரத்தை அடை-யும் பொழுது வ' எனும் சக்தி ஒலி எழும்ப 'சி' மீண்டும் வெளி ஒலியை இழந்து அடங்கிவிடுகிறது. இந்நிலையில் த்யானம் செய்-பவன் பரானந்தத்தில் அமிழ்ந்து, தானெனும் உணர்வற்றுப் போவான் என்பர். ஆகமங்கள், த்வஜாரோஹணம் என்னும் நிகழ்ச்சி த்வஜபடத்திலுள்ள வ்ருஷபம் ஆறு சக்ரங்களாம் வளை-யங்கள் ஊடே மேலே சென்று அமர்வது மூலம் பசுவான ஆத்மா பராசக்தியின் உதவியால் மேலே சென்று உய்வதைக் காட்டும். சைவாகமங்களில் வல்லுனரும் யோகம், க்ரியை இவற்றில் மிகுந்த பயிற்சி உடையவருமான உமாபதி சிவாசாரியர் த்வஜஸ்தம்பத்-தின் உள் தத்துவத்தை உட்கருத்தை) 'கொடிக்கவி'யின் (4வது செய்யுள்) மூலம் குறிப்பிட்டுள்ளார்.

பூதசுத்தி : சைவஸாதகன் சிவநிலையை அடைய வேண்டி உடலின் பல பகுதிகளைத் தூய்மைப்படுத்த மந்த்ரங்களையும் யோக முறைகளையும் ஆகமங்கள் விதிக்கின்றன. சாதாரண நிலையில் உடலில் உள்ள ஸ்தூல ஸூக்ஷ்ம அம்சங்களையும் செயல் திறன்-களையும் முழுமையாகத் தூய்மைப் படுத்துவது ஸாத்யமன்று; ஆனால் சிவநிலையில் இருந்துகொண்டு சிவனைப் பூசிக்கவேண்டும் என்பதால், இத்தூய்மைக்காக உடலை ஸ்தூலம், காரணம், பரம் என்று ஆத்ம, வித்யா, சிவதத்துவங்களுக்கீடாக மூன்று நிலை-களை உடையதாக அறியவேண்டும்.

அசுத்தமான உடலை சிவத்வத்தை அடைவிப்பதற்காக, முத-லில் ஹ்ருதயாகாசத்திலுள்ள பரமனை, த்வாதசாந்தத்திற்கு (ப்ரஹ்மரந்த்ரத்திற்குமேல் உள்ள ஆகாசத்துக்கு) கொண்டுவர வேண்டும். இதற்காக ஸாதகன் மந்த்ரங்களை கரந்யாஸம் செய்து, இரு கட்டைவிரல்களிலிருந்தும் கிளம்பி மூலாதாரத்தில் ஒன்றுகி ப்ரஹ்மரந்த்ரம் (தலையுச்சி) வரை ஸுஷும்ன நாடி

செல்வதாக மனதில் கொள்ள வேண்டும். ஹ்ருதயம், தொண்டை, நெற்றியின் நடுப்பகுதி முதலியவற்றில் இந்நாடி நடுவிலும் இடை இடப்பகுதியிலும் பிங்கலே வலப்பகுதியிலும் சென்று மூக்கின் அடிப்பாகத்தை அடைவதாகவும் கொள்ள வேண்டும். இதயத்திலிருந்து ஸுஷும்னு நாடி குழாய்போலுள்ளதாகவும் உச்சிப் பகுதியில் கவிழ்ந்த தாமரை மொட்டு கொண்டுள்ளதாகவும் உணரப்படவேண்டும். ஸுஷும்னேயின் உள்ளும் புறமும் குண்டலினீ சக்தி அம்ருதத்தைப் பொழிவதாகக் காண வேண்டும். இச்சக்திக்கும் ஸுஷும்னேக்கும் இடையில் ஜ்வலிக்கும் 'ஹூம்' எனும் 'சிகாபீஜமந்த்ரம்' அமைந்து உள்ளதாக நினைக்கவேண்டும். 'ஹூம்' என்னும் மந்த்ரத்தில் மனதை நிறுத்தி மூச்சின் பூரககும்பகங்களைப் பயிலவேண்டும். இந்நிலேயில் ப்ராணவாயு மேல் கிளம்பி த்வாதசாந்தத்தை எட்டும். இவ்வாறு அசுத்தமான வாயு அகற்றப்பட்டு, 'ஹூம்பட்' என்னும் மந்த்ரத்தை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதால் இதயம், தொண்டை, தாடையின் உட்பகுதி, புருவமத்தி, ப்ரஹ்மரந்த்ரம் இவ்விடங்களிலுள்ள 'தாமரை சக்ரங்கள்' மலர்வதாகக் கூறப்படுகிறது. 'தந்த்ரஸாரம்' கூறுவதாவது 'உடலின் உள்ளுள்ள அசுத்த வாயுவை ரேசகத்தால் வெளியேற்றி, ஆகாசத்திலுள்ள சுத்தமான வாயுவை மெதுவாக பூரகத்தினுல் உட்கொள்ள வேண்டும்.' இதை நிர்மலமணியின் 'ப்ரபை' நன்கு விளக்குகிறது. இந்நிலேயை அடைந்தபிறகு பரமனே ஸூக்ஷ்ம சரீரத்தில் ஹ்ருதயாகாசத்தில் கண்ணேப்பறிக்கும் ப்ரகாசத்துடன் கூடியவராக இருப்பதாக, அதற்குரிய மந்த்ரத்துடனும், ப்ராணுயாமத்துடனும் த்யானிக்கவேண்டும். நாத ரூபமான ஆத்மா மேற்செல்வதைக் குறிக்கும். 'ஸம்ஹார முத்ரை'யை வலது கையால் மூலாதாரத்திலிருந்து த்வாதசாந்தம்வரை உபயோகிக்கவேண்டும். பூதசுத்தியில், இரண்டாவது நிலேயாக, ஆத்மா மீண்டும் அமர்வதற்கு, புர்யஷ்டகமெனப்படும் (பஞ்சதன்மாத்ரைகள், புத்தி, மனஸ், அஹங்காம், இவைகளால் அமையும்) ஸூக்ஷ்ம தேஹமும் சுத்தப்படுத்தப்படவேண்டும் தேஹத்தின் முப்பத்தாறு தத்வங்களும் முறையே ஒவ்வொன்றும் தன் தன் காரணத்தில் ஒடுங்குவதாக பாவனே செய்யவேண்டும். கடைசியின் உள்ளதுபிந்-வில் ஒடுங்கும் இந்த ஒடுக்கமுறை நிர்மலமணியில் 'ப்ரபா' எனும் அகோர சிவபத்ததி வ்யாக்யானத்தில் நன்று விளக்கப்பட்டுள்ளது.

ஆத்மா உறையும் ஸ்தூலசரீரம், பெயர், உருவம், குலம் முதலியவற்றைக் கொண்ட பூதசரீரம் ஆகும். உடலேத் தூய-

மைப்படுத்துவதாவது பூதங்களின் உண்மையான தன்மை, ரூபம், அதிஷ்டாத்ரு தேவதை, கலை, மண்டலம் முதலியவற்றை முழுமையாக அறிவதேயாகும்.

பூதங்களுக்குள் ஆகாசம் எங்கும் நிறைந்தது, மற்றவற்றில் அதை அடக்கி ஒடுக்க முடியாது. மற்ற பூதங்கள் பலவிதங்கள், ஒன்றுக்கொன்று மாறுபட்ட தன்மையை உடையவை. இவற்றை ஆகமங்களில் குறிப்பிட்ட முறையில் பாவனை செய்து ஒன்று மற்றதன் தன்மையை அடைவதாகக் கொள்ளவேண்டும். உதாரணமாக, 'ப்ருத்வீ' தன் கடினத் தன்மையையும், மணத்தையும் விட்டு வாயுவின் தன்மையால் கவரப்பட்டதாகவும், இவ்வாறே நீர் தீயின் தன்மையை அடைந்ததாகவும் பாவிக்கவேண்டும். இது யோக முறையான பூரகம், கும்பகம், குறிப்பிட்ட மந்த்ரங்களில் உச்சாரணம், ஸுஷும்ன நாடியின் வழியாக மேல் நோக்கிய ரேசகம், இவற்றாலேயே ஸாத்யமாகும். ப்ராணாயாமத்தால் மேல்நோக்கிய ரேசகம் நிகழ்வதால், ப்ருத்விக்கு 15 ப்ராணாயாமங்களையும், வாயுவுக்கு 12ம், அக்னிக்கு 9ம், நீருக்கு 6ம், ஆகாசத்துக்கு மூன்றும் வேண்டும்.

பூதங்கள் தங்களுடைய தன்மையை இழந்துவிட்ட பிறகு அஸ்த்ர மந்த்ரத்தாலும், கால் கட்டை விரலினின்றும் உள்ளே மேற்கிளம்பும் அக்னியாலும் முழுவதுமாக அழித்து விடப்படுகின்றன. அத்துடன் ஸ்தூல தேஹமும், ஸூக்ஷ்ம தேஹமும் மந்த்ரங்களாலான 'வித்யா தேஹம்' ஆகி ஆத்மா உறைவதற்கு தக்கதாக ஆகி விடுகின்றன. இப்பொழுது, முன்பு நாதரூபமாக த்வாதசாந்தத்திற்க்கு கொண்டு செல்லப்பட்ட ஆத்மா மீண்டும் பூரகத்தால் ப்ரணவமந்த்ரோச்சாரணத்துடன் கொண்டுவரப்பட்ட ஹ்ருதய கமலத்திற்க்குள் மிகுந்த ப்ரகாசத்துடன் கூடிய ஒளியாக விளங்குகிறது.

பூதசுத்தியின் விளக்கத்தில், குண்டலினீ யோகத்தின் முக்கியத்துவமும், மந்த்ரங்களின் பயனும் ஸுஷும்ன நாடியின் முக்கிய பங்கும் நன்கு புலப்படும். உமாபதி சிவாசார்யரின் 'கொடிக்கவி'யில் கோடிட்டுக் காட்டப்பட்ட குறியீடுகளே பூதசுத்தியில் மிக விவரமாக காணப்படுகின்றன.

சுத்தம், அசுத்தம், சுத்தாசுத்தம் என்று மூவகைகளில் அடங்கும் 36 தத்வங்களே முறையே சிவதத்வம், ஆத்மதத்வம், வித்யாதத்வம் என்பவைகளாக, மனித உடலின் தோற்றம், ஒடுக்கம்

இவற்றிலும் அதே போல் சிவலிங்கத்திலும் காட்டப்படுகின்றன. மூலமந்த்ரங்களை உச்சரிக்கும்பொழுது உரிய அழுத்தம், நீளம் முதலியவற்றால் நாதமானது ப்ராணாயாமத்தின் மூலமாக யோக சக்ரங்களூடே செல்லும் பொழுது 36 தத்வங்களும் வெவ்வேறான அந்தந்த நிலைகளில் இயங்குகின்றன என்பதும் உணரத்தக்கது. 36 தத்வங்களின் விவரங்களைக் கொண்ட பட்டியல் தனியாக A, B என்ற குறியுடன் இக் கட்டுரையில் இணைக்கப்பட்டுள்ளது.

ஸாதகர்களுடைய சக்தியும், உள்ளப்பண்பாடும் வெகுவாக வித்தியாசப் படுவதால், அவர்களால் த்யானிக்கப் படுவதும் பூஜிக்கப்படுவதுமான சிவஸ்வரூபம், தத்வம் அல்லது உண்மையான ஸ்வபாவம், மூர்த்தி, ப்ரபாவம் என மூவகைப்படும். இம்மூன்று வகைகள் வாதுலசுத்தம் எனும் நூலில் கூறப்பட்டு உள்ளன. தத்வம் என்பது எல்லாவற்றுக்கும் மேலான நிஷ்கல நிலை என்றும், மூர்த்தி என்பது சந்த்ரசேகரர், அர்த்தநாரீச்வரர் போன்ற குறிப்பிட்ட உருவமைப்பைக் கொண்ட ஸகல நிலை என்றும், ப்ரபாவம் என்பது கோயிலில் கர்ப்பக்ருஹத்திலுள்ள ஸகல - நிஷ்கலங்களின் சேர்க்கையான சிவலிங்கம் எனவும் இந்நூல் விளக்குகிறது. சிவலிங்கமே மந்த்ரங்களாலான வித்யா தேஹத்தைக் கொண்டதாகவும் 'ஸாதாக்யம்', 'ஸதாசிவன்' என்றும் அழைக்கப்படும்.

ஸத்யோஜாதம் முதலிய ஐந்து உருவங்களின் சேர்க்கையாகவும், ஸ்ருஷ்டி முதலிய ஐந்து தொழில்களையும் குறிப்பிடுவதாகவும் சிவலிங்கம் உள்ளது. அவற்றுக்குரிய மந்த்ரங்களுடன் தகுந்த பாவனையுடன் சிவலிங்கத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் பூஜை செய்வதால் அந்நிலை ஏற்படுகிறது. இந்நிலையில்தான் 36 தத்வங்களும், கலைகளும், அவற்றின் 'ந்யாஸங்களும்' முக்கியமாகின்றன. சடங்குகளின் கோட்பாட்டிலிருந்து, மனித உடலின் அமைப்பும் இதே போன்றதென்பது தெளிவு.

சிவலிங்கத்தில் நன்கு காணப்படும் மூன்று பாகங்களாகிற சதுர அடிப்பாகமும், அதற்குமேல் எட்டு மூலைகளைக்கொண்ட உயர்ந்த பகுதியும், அதற்குமேல் வட்டமாக உயர்ந்த பகுதியும் முறையே ஸ்ருஷ்டி செய்யும் ப்ரம்மாவையும், காக்கும் விஷ்ணுவையும், அழிக்கும் ருத்ரனையும் குறிப்பவை. சைவ ஆகமங்களின்படி இம் மும்மூர்த்திகளும் சுத்த வித்யா தத்வத்தில் உள்ளனர். மேற் பகுதியிலுள்ள ருத்ரஸ்தான வட்டப் பகுதிக்கு சிவதத்வத்தின் ஐந்து அங்கங்களும், அதன் கீழுள்ள

விஷ்ணுவின் பகுதிக்கு ஏழு வித்யா தத்வங்களும், அடியில் உள்ள ப்ரம்மாவின் பகுதிக்கு 24 ஆத்ம தத்வங்களும் உரியவையாம். வாமதேவபத்ததியில் இது கூறப்பட்டுள்ளது. கண்ணுக்குப் புலனாகும் இம்மூன்றினைத் தவிர, அவற்றுக்கும் மேலாக திரோதானம் செய்யும் மஹேச்வரன், அனுக்ரஹம் செய்யும் ஸதாசிவன் ஆகிய இரு கடவுளரும் சிவலிங்கத்தோடு ஸம்பந்தப்பட்டவர்களாக, ஆனால் காட்சிக்கு அப்பாற்பட்டு அமைந்துள்ளனர். (படம் 10)

சிவலிங்கார்ச்சனை :—சிவலிங்கத்தில் மஹேச்வரனை ஸதாசிவன் முதலிய ரூபமாக ஈசானன் முதலாக ஸத்யோஜாதன் ஈறாக ஐந்து ப்ரம்ம மந்த்ரங்களாலும் சிரஸ், ஹ்ருதயம் முதலிய அங்க மந்த்ரங்களாலும் பூஜிக்கவேண்டும். ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவும் உள்ள ப்ரபஞ்சம் அஷ்டமூர்த்தியான (பஞ்ச பூதங்களும், ஸூர்யன், சந்த்ரன், யஜமானனான ஆத்மா ஆகிய எட்டு ரூபங்களைக் கொண்ட) சிவனுடைய தோற்றமே என்பதும் சிவலிங்கத்தில் அடங்கும். ஆகவே தத்வங்கள், தத்வேச்வரர்கள், மூர்த்திகள், மூர்த்தீச்வரர்கள் இவற்றின் பூஜையும் சிவபூஜையில் முக்கியமாக இணைந்ததாகும்.

த்வஜஸ்தம்பமும், சிவலிங்கமும், ஜீவனும் :— முற்கண்டவாறு த்வஜஸ்தம்பம் குறியீடுகள் நிரம்பியதென்பது தெளிவாகத் தெரிகிறது. ஒருபுறம் சிவனோடு ஒப்புமை கொண்டதோடு மறுபுறம் தனி ஜீவனான மனிதனின் உடலுடன், அதிலும் சிறப்பாக மனித உடலில் அமைந்திருக்கும், முக்கியமான யோகத்திற்குரிய ஸுஷும்னா நாடியுடன், ஒப்புமை பெற்றிருப்பதானது சிவபூஜைக்கும் சிவஸாயுஜ்யத்துக்கும் இணைந்ததான யோகத்துடன் கூடிய மந்த்ர முறைகளைக் குறிப்பதாகும்.

த்வஜஸ்தம்பத்துடன் இணைந்த சடங்குகள்

த்வஜஸ்தம்பத்துக்கு உரிய சடங்குகள், அதன் ப்ரதிஷ்டை, கொடியில் உள்ள வ்ருஷபம், உத்ஸவ காலங்களில் நிகழ்த்தப்படும் த்வஜாரோஹணம் இவற்றைப்பற்றி காமிகாகமத்திலும், க்ரியாக்ரமத்யோதிகையிலும்,சிவமஹோத்ஸவ ஸங்க்ரஹத்திலும் கூறப்பட்டவை கவனத்துக்குரியவை. இச்சடங்குகளின் விவரங்களைக் கொண்டு. த்வஜஸ்தம்பத்தின் முற்கூறிய குறியீடுகளை நிரூபிக்க இயலும். த்வஜஸ்தம்ப பூஜையிலும் தத்வங்கள், தத்வேச்வரர்கள், மூர்த்திகள், மூர்த்தீச்வரர்கள் அடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

த்வஜாரோஹணம்

ஆகமங்கள், ஒருநாள் முதல் 27 நாட்கள் வரை நிகழும் சைவம், கௌணம், ஸௌரம், சாந்த்ரம் முதலிய ஒன்பதுக்கும் அதிகமான உத்ஸவங்களைப் பற்றிக் கூறுகின்றன. ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட நாள்களில் நடத்தும் உத்ஸவங்களில் த்வஜாரோஹணம் இன்றியமையாததாகும். க்ரியாக்ரமத்யோதிகையின்படி த்வஜாரோஹணத்தை முற்பகலிலோ, பிற்பகலிலோ, இரவிலோ கூட ஒரு சுபமுஹூர்த்தத்தில் செய்யலாம். ஆனாலும் பெரும்பாலும், த்வஜாரோஹணத்துக்கு முன் தினமான 'அதிவாஸம்' என்று கூறப்படும் நாளில் பூஜைகள் தொடங்கப்பட்டு மறுதினம் விடியற்காலையில் நல்லோரையில் த்வஜாரோஹணம் நிகழ்த்தப்படுவது வழக்கமாக இருக்கிறது.

வ்ருஷயாகாதிவாஸம்: த்வாஜாரோஹணத்துக்கு முந்தைய நாளில் வெள்ளைக்கொடியில் வரையப்பட்ட வ்ருஷபத்துக்கு சிறப்பான பூஜைச் சடங்குகள் செய்யப்படவேண்டும். அதன் ப்ரதானமான ஸாத்விக ஸ்வபாவத்துக்கு உகந்ததாக வ்ருஷபத்தின் நிறம் பளிங்கின் வெண்மையாகவும், வ்ருஷபம் மூன்று கண்களுடன் ருத்ரனை த்யானிப்பதாகவும் தர்மத்தின் சிறந்த ஸ்வரூபமாகவும் இருக்கவேண்டும்.

வ்ருஷபத்தை த்வஜபடத்தில் வரைந்தபிறகு செய்யப்படும் சடங்குகளால் வ்ருஷபத்துக்குள் உயிர் உறைவிக்கப்படுகிறது.

(i) நேத்ரோன்மீலனம் (கண் திறத்தல்): தரையில் சுத்தப்படுத்தப்பட்ட இரண்டு இடங்களில் அரிசியைப்பரப்பி அதன்மேல் கொடித் துணியையும், தேனையும் நெய்யையும் வைத்து தங்க சலாகையாலோ அல்லது அருகம்புல் குருத்தாலோ வ்ருஷகாயத்ரீ அல்லது ம்ருத்யுஞ்ஜய மந்த்ரத்தையோ உச்சாரணம் செய்து கொண்டு இரண்டு கண்களையும் திறக்கவேண்டும். பிறகு ஸூர்யன், சந்த்ரன் என்று கருதப்படும் அவ்விரு கண்களிலும் தேனையும் நெய்யையும் குழைத்துப் பூசவேண்டும்.

(ii) ஜலாதிவாஸம் (நீரில் வஸித்தல்) : — கொடித் துணியில் வரையப்பட்ட வ்ருஷபத்தை நேரடியாக ஜலத்தில் வைக்கமுடியாதாகையால் மந்த்ரிக்கப்பட்ட ஜலத்தையும், பஞ்சகவ்யத்தையும் அதன்மேல் சிறிதே தெளிப்பதுடன், கண்ணாடியில் வ்ருஷபத்தின் ப்ரதிபிம்பம் விழும்படிச் செய்து அப்பிரதிபிம்பத்தின் மேல்

மந்த்ர ஜலத்தையும் பஞ்சகவ்யத்தையும் மெதுவாக ஊற்ற வேண்டும். பிறகு ஒரு தர்ப்ப முடிச்சு கொடித்துணியில் கட்டப் படும்.

(iii) ஜீவந்யாஸம் (உயிரூட்டல்) :—இது எல்லாவற்றிலும் முக்கியமான சடங்காகும். கொடித்துணியிலும், எட்டு குடங்கள் சூழ்ந்த நடுக்கும்பத்திலும், சிவாக்னியிலுமாக மூன்று நிலைகளில் செய்யப்படும். ஆரம்பத்தில் மூன்றுக்கும் தனித்தனியாக செய்யப்படும் பொதுவான சடங்குகள் வருமாறு :—

1. அவற்றின் ஆஸனபூஜை, 2. ஆத்ம-வித்யா-சிவதத்வங்களுக்காக அவற்றை மூன்றாகப்படுத்தல். 3. தத்வ-தத்வேச்வர பூஜை. மேற்கூறிய மூன்று தத்வங்களையும், பரிவாரங்களுடன் கூடிய அதிஷ்டாத்ரு தேவதைகளான ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் இவர்களையும் பூஜித்தல், 4. மூர்த்தி-மூர்த்தீச்வர பூஜை—எட்டு திக்குகளிலும் உக்ஷன், கோபதி, ச்ருங்கின், நந்தி, வ்ருஷபதி, விஷாணி, சங்குகர்ணன், மஹோதரன் ஆகிய வ்ருஷபத்தின் எட்டு மூர்த்திகள் சிவனுடைய அஷ்டமூர்த்திகளுடன் தொடர்பு கொண்டவைகளாக பாவிக்கப்படுதல், 5. ஆங்காங்கு தேவைக்கேற்ற மாறுதல்களுடன் கூடிய 'ஓம் வ்ரும் வ்ருஷபாய நம:' என்பதே மூலமந்த்ரமாகும்.

கொடி, கும்பம், அக்னி இம்மூன்றிலும் தனித்தனியே வ்ருஷபத்தைப் பூஜை செய்த பிறகு ஸம்பாத ஹோமம், நாடீஸந்தானம், பூர்ணாஹுதி இவற்றால் மூன்றும் மந்த்ர பூர்வமாக (பாவனையாக) ஒன்று சேர்க்கப்படும். எல்லா ஆகமங்களின் கருத்தாகிற அவை எல்லாவற்றிலும் ஒரே ஆத்மஸ்வரூபம் உறைகிறது என்பதை வலியுறுத்துவதே இச்சடங்கின் நோக்கம். யாகத்தை ரக்ஷிப்பவனாக சிவன் கும்பத்தில் இருப்பதாகவும், அக்னியில் ஹோமத்திற்கு ஆதாரமாக இருப்பதாகவும், ஆசார்யனிடத்தில் அனுக்ரஹம் செய்பவனாக இருப்பதாகவும் இதன் அடிப்படை உட்கருத்து. சிவமந்த்ரங்களை உச்சரிபபதாலும், அக்னியானது சிவசக்தியிலிருந்து உண்டாக்கப் படுவதாலும், அக்னி குண்டம் 30 தர்ப்பங்களைக் கொண்ட 'விஷ்டரம்' (ஆஸனம்) உடையதாக இருப்பதாலும், பலாச ஸமித்துக்களால் சூழப்பட்டதாக இருப்பதாலும் சிவாக்னி' எனப்படும். கும்பமும் சிவனின் உருவ மாறுபாடாகவே கருதப்படும். கும்பத்தின் மண்ணும், கும்பத்தில் உள்ள நீரும், சுற்றப்பட்ட நூலும், மாந்துளிர்களும்

மற்றுமுள்ளவை யாவையும் சிவனுடைய உடலைச் சேர்ந்த பகுதிகளாக பாவிக்கப்படுகின்றன. இதை சைவபூஷணம் எனும் நூல் கூறுகிறது.

ஜீவந்யாஸச் சடங்குகள் :— (i) கும்பத்தில் தத்வ-தத்வேச்வர பூஜை : ஜலாதிவாஸத்திற்குப் பிறகு வ்ருஷபத்துடன் கூடிய கொடியானது யாகமண்டலத்துக்குக் கொணரப்பட்டு சுத்தப் படுத்தப்பட்ட, அலங்கரிக்கப்பட்ட தரையில் வைக்கப்படும். எட்டு பக்கங்களிலும் எட்டு குடங்கள் எட்டு வ்ருஷப ரூபங்களின் படி, குறிப்பிட்ட முறையில் வைக்கப்படும் (படம் 11). ஆசார்யன் வ்ருஷபத்தை பாதத்திலிருந்து முழங்கால் வரை ஒரு பகுதியாகவும், அதிலிருந்து கழுத்துவரை ஒரு பகுதியாகவும், அதற்கு மேலுள்ளதை ஒரு பகுதியாகவும் பிரிப்பர். இவை அவற்றுக்குரிய மந்த்ரங்களுடன் முறையே ஆத்மதத்வம், வித்யாதத்வம், சிவதத்வம் என பூஜிக்கப்படும். அதன்பிறகு, விதிக்கப்பட்ட முறைப்படி ஸதாசிவனிலிருந்து ப்ருத்வீவரை 34 தத்வங்களும் ஒவ்வொரு தத்வத்திற்கும் உரிய அதிதேவதைகளுடன், உச்சியிலிருந்து பாதம் வரை பூஜிக்கப்படும். இவற்றை க்ரியாக்ரமத்யோதிகை விவரிக்கிறது.

(ii) மூர்த்தி - மூர்த்தீச்வர பூஜை :—வ்ருஷபத்தின் எட்டு மூர்த்திகளையும் குறிப்பிட்ட திக்குகளில் ஆவாஹனம் செய்து அவற்றையே சிவனின் அஷ்ட மூர்த்திகளாக பாவித்து உரிய மந்த்ரங்களுடன் ஆத்ம, வித்யா, சிவதத்வங்களாக பூஜித்தல். மறுபடியும் செய்யப்படும் ஜீவந்யாஸத்தால் வ்ருஷபத்தின் ஜீவசக்தி பலப்படுத்தப் படுகிறது. மஹோத்ஸவத்தில் வ்ருஷப ஸாந்நித்யத்தைக் குறிப்பதற்காக ஸம்ஸ்கார, ஸ்தாபன, ஸந்நிதான, நிரோதன முத்ரைகள் ப்ரயோகப்படுத்தப்படுகின்றன.

அக்னியில் பூஜை :— சிவாக்னியை அமைத்து அதன் மத்தியில் வ்ருஷபம் ஆவாஹனம் செய்யப்படுகின்றது. ஸமித்து, நெய், ஹவிஸ் இவை ஹோமம் செய்யப்படுகின்றன. இதில் வ்ருஷகாயத்ரீ, வ்ருஷபத்திற்குரிய தத்வ - தத்வேச்வர மூர்த்தி-மூர்த்தீச்வர மந்த்ரங்கள் உச்சரிக்கப்படுகின்றன. காமிகாகம ச்லோகங்கள் இதைக் கூறுகின்றன.

ஸம்பாத ஹோமம் :—(கொடியிலும் கும்பத்திலும் அக்னியிலும் உள்ள வ்ருஷபத்தை ஒன்றுகக் கூட்டுதல்) ஆசார்யர் அக்னிக்-

கருகிலுள்ள சாந்தி கும்பத்தை எடுத்துக்கொண்டு கொடியருகில் சென்று கும்பத்திலுள்ள ஜலத்தால் வ்ருஷப மூலமந்த்ரோச்சாரணத்துடன் வ்ருஷபத்தை ப்ரோக்ஷித்து, மூன்று தத்வங்களைக் குறிக்கும் வகையில் தர்ப்பைப்புல்லின் அடி, நடு, நுனிப்பகுதிகளால் முறையே கும்பத்தின் அடி, நடு, நுனிப்பகுதிகளைத் தொடுவார். அந்த தர்ப்பையானது நூலால் ஒரு நுனியில் கொடியுடன் கட்டப்படுகிறது. இது கும்பத்தையும் வ்ருஷபத்தையும் ஒன்ருக்குவதைக் குறிக்கும். இதை நாடீ ஸந்தானம் எனக் கூறுவர்.

கொடியிலும் கும்பத்திலும் அக்னியிலுமுள்ள வ்ருஷபம் ஒன்றே என்பது ப்ரம்மா, வஷ்ணு, சிவன் இவர்களுக்குரிய தனித்தனியான மூன்று பகுதிகளுக்கு செய்யப்படும் ஸம்பாத ஹோமத்தால் விளங்கும். உதாரணமாக ஆத்மதத்வத்திற்க்கு இவ்வாறு அக்னியில் ஹோமம் செய்யப்படும். 'ஓம் ஹாம் வ்ரும் வ்ருஷபாய நம:' —'ஓம் ஹாம் வ்ருஷாத்மதத்வாய நம:' —'ஓம் ஹாம் வ்ருஷாத்மதத்வாதிபதயே ப்ரஹ்மணே நம:'. பிறகு ஸ்ருக் - ஸ்ருவ கரண்டியில் 'ப்ரஹ்மணே ஸ்வாஹா' என்ற மந்த்ரத்தால் ஆஹுதி செய்யப்படும். ஆனல் இவ்வாறு மந்த்ரோச்சாரணம் செய்யும் பொழுது 'ஸ்வாஹா'விலுள்ள 'ஸ்வா' என்பதை உச்சரிக்கும் பொழுது ஆஹுதியில் பாதி மட்டுமே செய்யப்படும், மிச்சமுள்ள ஆஹுதிப்பொருளோடும் சாந்தி கும்பத்துடனும் ஆசார்யர் கொடியிடம் சென்று அதிலுள்ள வ்ருஷபத்தின் அடிப்பகுதியை குசத்தின் அடிப்பகுதியால் தொட்டு கும்பத்தில் உள்ள ஜலத்தால் அதை ப்ரோக்ஷணம் செய்து, பிறகு 'ஹா' என்று ('ஸ்வாஹா'வின் இறுதிப் பகுதி) உச்சரித்து மிகுதியான ஆஹுதியைச் செய்யவேண்டும். வ்ருஷபத்தின் வித்யாதத்வத்திற்கும் சிவதத்வத்திற்கும் ஜீவந்யாஸத்திற்காக இதே மாதிரி செய்யப்படும். இவ்வாறு மூன்று அதிகரணங்களிலும் (கொடி, கும்பம், அக்னி) வ்ருஷபம் சுத்தப்படுத்தப் பட்ட பிறகு மந்த்ரங்கள், ஸ்தோத்ரங்கள், இசை, நாட்டியம் இவற்றுடன் நைவேத்யம் செய்யப்படும். [இதன் விவரங்கள் க்ரியாக்ரமத்யோதிகையிலும் மஹோத்ஸவ ஸங்க்ரஹத்திலும் காணப்படும்].

முதல் நாளில் செய்யப்படும் அதிவாஸச் சடங்குகள் இத்துடன் முடிகின்றன.

த்வஜாரோஹணம்

(i) பூர்வாங்க சடங்குகள் :—அதிவாஸத்திற்க்கு மறுநாள் சுபமுஹூர்த்தத்தில், வ்ருஷ காயத்ரியுடனும் வ்ருஷ மூலமந்த்ரத்து-

டனும் புதிதாக (மறுபடியும்) கொடியிலும் நடுக்கும்பத்திலும் சுற்றியுள்ள 8 கும்பங்களிலும் அக்னியிலும் வ்ருஷபத்திற்கு பூஜை செய்யப்படும்.

(ii) கொடி மட்டும் தனியாகவோ, அல்லது த்ரிசூலத்துடனே, அல்லது சிவமூர்த்தியுடனே குறிப்பிட்ட இடத்தைச்சுற்றி இசை, நாட்டியத்துடன் வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மீண்டும் த்வஜஸ்தம்பத்தை அடையும். (காமிகாகமத்தில் விவரம் காண்க)

(iii) த்வஜதண்ட ப்ரதிஷ்டை: த்வஜஸ்தம்பம் அதன் இடத்தில் அடியிற்கண்ட முறைப்படி நிறுவப்படும். அந்த இடத்தின் அருகில் ஒருமேடை அமைக்கப்படும். அதன் மேல் கொடியையும், கும்பத்தையும், த்ரிசூலத்தையும் வைப்பதற்காக மூன்று சுத்தப்படுத்தப்பட்ட தனித்தனி இடங்கள் அமைக்கப்படும். கும்பத்திலுள்ள மந்த்ரித்த ஜலத்தால் கொடியிலுள்ள வ்ருஷபம் ப்ரோக்ஷணம் செய்யப்பட்டு பிறகு அலங்கரிக்கப்படும். அஸ்த்ரராஜனை த்ரிசூலத்திற்கும் இதேபோல் செய்யப்படும்.

கும்பத்திலுள்ள ஜலத்தால் த்வஜ தண்டத்தை ப்ரோக்ஷணம் செய்து அஸ்த்ர மந்த்ரத்துடன் தண்டத்தை வேதிகையில் முறைப்படி நிறுவவேண்டும். பிறகு அதைச்சுற்றி தர்ப்பத்தினாலான கயிறு கட்டப்படும். இந்நிலையில் தண்டமானது ஒரு காலும் இருகைகளும் மூன்று கண்களும் உடைய புருஷனாக பாவிக்கப்படவேண்டும். அதைச் சுற்றி கட்டப்பட்ட தர்ப்பக் கயிறு தண்டத்தில் மயிர்க்கூச்சல் போன்றது. வெள்ளை நிறத்துடன் கூடியது. தண்டத்தின் உயரம் சுகநாஸிகையின் அளவாகும். தாமரைப் பீடத்தின் மேல் தண்டம் நிமிர்ந்து நிற்கிறது. இவ்வாறு தண்டத்தின் த்யான ச்லோகம் கூறுகிறது.

(iv) தண்டத்தின் பகுதிகளில் ந்யாஸம்: தண்டத்தின் அடியில்உள்ள தாமரைப் பீடத்தில் சக்திகளின் ந்யாஸமும் கூர்மந்யாஸமும் செய்யப்படும். தண்டம் முழுவதிலுமாக ஸதாசிவனை ஆவாஹனம் செய்து, அடியிலிருந்து உச்சி வரை உள்ள மூன்று பாகங்கள் ஆத்ம, வித்யா, சிவதத்வங்களுக்கு உரியனவாக்கப்படவேண்டும்.

த்வஜஸ்தம்பத்தின் மற்ற பாகங்களுக்குரிய ந்யாஸங்கள் பின்வருமாறு:

மூன்று குறுக்குக் கட்டைகள் : (யஷ்டி பலகங்கள்)	—இச்சாசக்தி, ஞானசக்தி, க்ரியாசக்தி
இரண்டு 'தாங்கும் தடிகள்' (உபதண்டங்கள்)	—ஸூர்யன், சந்த்ரன்
கொடியேற்றுவ்தற்குள்ள கயிறு	—(அனுக்ரஹ) சக்தி
கொடி	—வாயு
கொடியில் உள்ள வ்ருஷபம்	— வ்ருஷபம்

கயிற்றைக் கொடியில் கட்டுதலும் வ்ருஷப ப்ரதிஷ்டையும்

முற்கூறிய த்வஜஸ்தம்ப பூஜைக்குப் பிறகு வ்ருஷகாயத்ரீ மந்த்ரத்தைச் சொல்லி, சிறுமணிகளால் ஓரத்தில் அலங்கரிக்கப்பட்ட கொடித்துணி கயிற்றால் கட்டப்படுகிறது. கொடியிலுள்ள வ்ருஷபமும் கும்பத்தில் ஆவாஹனம் செய்யப்பட்ட வ்ருஷபமும் ஒன்றே என்பதை வலியுறுத்த கும்பத்திலிருந்து, வ்ருஷபத்தை நினைத்தவாறே பீஜத்தை எடுத்து கொடியிலுள்ள வ்ருஷபத்தின் இதயத்தில் வைக்கப்படுகிறது. மீண்டும் கும்பஜலம் கொடித்துணியிலுள்ள வ்ருஷபத்தின்மேல் தெளிக்கப்படுகிறது. கொடியிலுள்ள வ்ருஷபத்துக்கு ஜீவந்யாஸ (உயிரூட்டல்) சடங்கு முடிந்த பிறகு புஷ்பங்களும் வாஸனை த்ரவ்யங்களும் ஸமர்ப்பிக்கப் பட்டபின் கொடியானது ஏற்றப்படுவதற்குத் தயாராக உள்ளது.

பேரி பூஜை :—கோயிற் சடங்குகளிலும் மஹோத்ஸவ காலங்களிலும் இசையும் இசைக்கருவிகளும் முக்கியமாக இருந்தாலும், அவற்றுள் 'பேரி' வாத்யம் சிறப்பாக த்வஜாரோஹணத்துடன் இன்றியமையா தொடர்பு கொண்டது. த்வஜாரோஹணத்தில் முதற் சடங்குகளில் கொடியோடு 'அஸ்த்ரராஜன்' எனப்படும் த்ரிசூலமும் பேரி வாத்யமும் அலங்கரிக்கப் பட்ட சுத்தமான தரையில் பூஜைக்காக வைக்கப்படும். இந்நிலையில் பேரி வாத்யம் அதன் பல பகுதிகளில் உறையும் பல தெய்வீக சக்திகளின் ஒருங்கிணைந்த உருவமாகக் கருதப்படுகிறது. எல்லா ஆகமங்களுமே இதைக் கூறுகின்றன. முதலில் மந்த்ரித்த ஜலமும் பஞ்சகவ்யமும் பேரியின் மேல் தெளிக்கப்படும். பிறகு பல வர்ணங்களோடு கூடிய துணி அதன் மேல் வைக்கப்படும். அதன் பின்னர் பேரியின் மத்தியிலும், வலது, இடது பாகங்களிலும் முறையே சம்புவும், விஷ்ணுவும், ப்ரம்மாவும் உரிய மந்த்ரங்களுடன் பூஜிக்கப்படுவர். கீலங்களில் (உலோக ஆப்புகளில்) மாத்ரு

தேவதைகளும், நூல்களில் நாகமும், வட்டமான இரு பகுதிகளிலும் சந்திரனும் ஸூர்யனும், பேரியை வாசிக்க அடிக்கும் குச்சியில் ஷண்முகனும் பூஜிக்கப்படுவர் (படம் 12): உரிய ந்யாஸங்களுக்குப் பிறகு புஷ்பங்களேயும், வாஸனேத் திரவியங்களேயும் உணவுப் படைப்புகளேயும் பேரிக்கு அர்ப்பணம் செய்யவேண்டும்.

பேரியை 'பிந்து'வின் ரூபமாக தியானித்து ஆசார்யர் தர்ப்பைப் புல்லால் மூன்று முறை பேரியை அடிப்பார். ஆசார்யரைப் பின்பற்றி பேரி வாத்யத்தை வாசிக்கும் கலேஞனும் புஷ்பம் முதலியவற்றை அர்ப்பணித்து நந்தி தாளத்தை பேரியில் வாசிக்கத் தொடங்குவான்.

அஸ்த்ரராஜ பூஜை :—'பேரிதாடன'த்துக்கு முன்பு 'அஸ்த்ரராஜ' (த்ரிசூல) பூஜையைக் கவனிப்பது அவசியம். மஹோத்ஸவம் முழுவதிலும், யாகசாலே, மூர்த்திகளின் புறப்பாடு, மற்ற உத்ஸவ சடங்குகள், முதலியவற்றிலும் அஸ்த்ரராஜனுக்கு முக்ய பங்கும் இடமும் உண்டு. முதல் பூஜை அதற்கே அளிக்கப்படுகிறது. அஸ்த்ரராஜனின் குறியீடான த்ரிசூலம் என்பது மூன்று உயர்ந்து நிற்கும் கம்பிகளேக்கொண்டதாகும் எட்டுதளத் தாமரை உருவமுள்ள ஆஸனத்தைக் கொண்ட பலகையில் த்ரிசூலம் நிறுவப்பட்டிருக்கும். ஆஸனத்தின்மேல் ஒரு சிறிய தண்டமும் அதன்மேல் கும்பம் போன்ற பகுதியும் உண்டு. உயர்ந்து நிற்கும் அஸ்த்ரராஜனின் இப்பகுதிகள் ப்ரம்மா, விஷ்ணு முதலிய முக்கிய பெருந்தெய்வங்களே மட்டுமின்றி, உத்ஸவ காலத்தில் சிறப்பாகச் சிவனே வணங்கக் காத்திருக்கும் முப்பத்து மூன்றுயிரம் கோடி தேவர்கள், 11 ருத்ரர்கள், 9 வஸுக்கள், 12 ஆதித்யர்கள், 18 கணங்கள், முதலியோரையும் கொண்டவையாகக் கருதப்படுகின்றன. 'பூ:' 'புவ:' முதலிய ஏழுஉலகங்களுமே த்ரிசூலத்தில் அடங்கியுள்ளவை என்று கூறப்படுகிறது. இப்படிப்பட்ட விஸ்தாரமான முழுமையான பாவத்திலேயே 36 தத்வங்கள், 227 புவனங்கள், 51 அக்ஷரவர்ணங்கள், 94 பதங்கள், 5 கலேகள், 11 மந்த்ரங்கள் இவற்றையெல்லாம் த்ரிசூலத்தில் 'ந்யாஸம்' செய்யவேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

த்ரிசூலத்தின் மூன்று நெடிய கம்பிகளும் மூன்று தத்வங்களேயும், அவற்றின் அதிஷ்டாத்ரு தேவதைகளேயும் குறிப்பிடுகின்றன. ஆகவே அவற்றுக்குரிய ந்யாஸங்களேச் செய்யவேண்டும். பலகையில் பார்வதியையும், கும்பம் போன்ற பகுதியின் அடிப்பாகத்தில்

ஸுப்ரஹமண்யரையும், கும்பத்தின் வாய்ப்பகுதியில் விக்னேச்வரரையும் வழிபடவேண்டும். கும்பத்துக்கு கீழுள்ள த்ரிசூல தண்டத்தில் மேற்பகுதியில் மன்மதனும் நடுவில் பாஸ்கரனும் அடியில் சண்டேச்வரரும் ந்யாஸம் செய்யப்பட வேண்டும். ஆஸனமாகிற தாமரையின் தென்கிழக்கு முதல் வடகிழக்கு வரை உள்ள ஏழு தளங்களில் ஏழு 'மாத்ருகை'களும், சூலத்தின் கடைசி அடிப்பகுதியில் தெய்வக் குழுவினரான வஸுக்களும் ருத்ரர்களும் ஆதித்யர்களும் உள்ளனர். (படம் 13)

பேரிகை அடித்தல் :—த்ரிசூலத்தில் ந்யாஸங்களின் மூலமாக ஸகல தேவதைகளையும் முறைப்படி வைத்த பிறகு பேரிகையை அடித்து அழகிய அமைப்புடன் கூடிய சூர்ணிகைகளால் இயல் நடையிலோ செய்யுள்களிலோ அத்தேவதைகளை அழைத்தல் நிகழும். த்வஜாரோஹணத்தில் வந்திருப்பதுடன் எல்லா உலகங்களிலுமுள்ள எல்லா உயிரினங்களையும் காக்க அத்தேவதைகளை வேண்டுவதும் பேரியை அடித்து ஒலியெழுப்புவதின் கருத்தாகும்.

த்வஜாரோஹணம் உள்ளிட்ட ப்ரஹ்மோத்ஸவ (மஹோத்ஸவ) சடங்குகளைப் பற்றிய விவரங்களின் வெவ்வேறான, வகைகளை க்ரியாக்ரமத்யோதிகை அளிப்பது குறிப்பிடத் தக்கதாகும். முதற் பகுதியில் அகோரசிவாசார்யர் தன் கருத்துக்களை உரைநடையில் தருகிறார். இரண்டாம் பகுதியில் (மஹோத்ஸவ் திக்ரமம் – ஆகமசேகரம்) காமிகம், வீர தந்த்ரம், ஸகலாகமஸங்க்ரஹம் எனும் நூல்களின் கருத்துக்களை பெரும்பாலும் செய்யுளில் விளக்குகிறார். சூர்ணிகையால் பல்வேறு தேவதைகளை அழைத்தல் த்வஜாரோஹணத்தில் உள்ளடங்கியதாகும் என்பது இதில் விளங்குகிறது. ஸகலாகமஸங்க்ரஹம் இவ்வாறு தேவதைகளை அழைத்தலை இரண்டிடங்களில் கூறுகிறது. முதலாவதாக சிவன், விச்வேச்வரர் முதலிய மூர்த்திகளை கோயிலுக்குள்ளோ வெளியிலோ ஊர்வலமாக எடுத்துச் சென்று அவற்றை முக்கிய ஆலயப் பகுதிக்கு மீண்டும் கொண்டு வரும்பொழுது ஆசார்யர் தீபம் முதலிய உபசாரங்களை அர்ப்பணம் செய்து, த்வஜஸ்தம்பத்துக்கு தெற்கில் (வலது பக்கத்தில்) தன் உதவியாளர்களுடன் இருந்து கொண்டு பேரி வாத்ய முழக்கத்துடன் வாய்ப் பாட்டும் வாத்ய இசையும் நாட்டியமும் விளங்க, உரை நடையிலும் செய்யுளிலும் தேவதா ஸ்தோத்ரமாகிற சூர்ணிகைகளை ஓத வேண்டும். இரண்டாவதாக, ஸாயங்காலம் ஒன்பது திக்குகளில் உள்ள தேவதைகள் அழைக்கப்படுகின்றனர். இது ஸந்த்யாவாஹனம் எனப்படும். இது ஒரு தனிப்பட்ட சடங்காகும்.

இவ்விஷயத்தில் பல்வகை இசைக்கருவிகளும், ருத்ரகணிகைகளும், படைப்பதற்கான அன்ன லிங்கமும், சுபமான தான்ய முளைகளும் மற்றும் பலவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் ஆசார்யரைப் பின்பற்றி நந்திக்கருகிலுள்ள ப்ரஹ்மஸ்தானம் எனும் பலிபீடத்துக்குச் செல்லும். இங்கிருந்தே ஆசார்யரால் சூர்ணிகையுடன் 'நவஸந்தி ந்ருத்யம்' தொடங்கப்படும். பின்னர் வாத்யக்காரர்களும் ருத்ரகணிகைகளும் ஆகமங்களில் கூறியபடி குறிப்பிட்ட பண்களிலும் தாளங்களிலும் இசையும், ந்ருத்யமும் நடத்துவார்கள்.

இக்காலத்தில் கோயில்களில் த்வஜாரோஹணத்தின் போது சூர்ணிகை ஓதுதல் குறியீடான குறுகிய அமைப்பிலேயே நடத்தப் படுகிறது. நேரம் போதாதிருத்தல், மற்றும் பல காரணங்களால் இப்படி இருக்கலாம். ஸகலாகமஸங்க்ரஹத்தில் கூறியபடி சூர்ணிகை ஓதுதல் த்வஜாரோஹணத்தில் தனியாகவும் ஸாயங்கால பூஜையில் தனியாகவும் நிகழ்வது விவரமாக எல்லா தேவதைகளையும் அழைத்தல், உத்ஸவத்தின் எல்லா நாட்களிலும் செய்யப்பட வேண்டுவதையும், ஆகமங்களில் கூறியபடி ஒவ்வொரு நாளும் இரு முறையோ, மூன்று முறையோ செய்யப்படவேண்டுமென்பதையும் உறுதிப்படுத்துகிறது. முக்யமாக கொடியேற்றம் தொடங்கி கொடி இறக்கம் வரை நந்தி பூஜை முக்யமானதாகக் கருதப்படுகிறது.

அஸ்த்ர ராஜ பூஜையும் பேரி பூஜையும் நடந்தபிறகு ஆசார்யர், சிவனும் சக்தியும் குடிகொண்ட இத்தனிக் கோயிலில் த்வஜாரோஹணம் நடக்கப் போவதை அறிவிப்பார். த்வஜாரோஹணம் தொடங்கி உத்ஸவ நாட்கள் முழுவதும் எல்லா தேவர்களும், மனிதர்களும், மற்ற உயிரினங்களும் இங்கு வந்து தங்கவேண்டுமென்பது சிவனின் கட்டளை என்பதையும் கூறுவார்.

சூர்ணிகை ஓதுதல் :—பிறகு ஆசார்யர் அழகிய நடையில் உரை நடையிலும் செய்யுள் அமைப்பிலுமுள்ள சூர்ணிகையை ஓதுவதன் மூலம் அஸ்த்ரராஜனில் உள்ள அதிதேவதைகள் தொடங்கி தனித்தனியாக எல்லா தெய்வங்களையும், தேவதைகளையும், மலைகளையும், திக்பாலர்களையும், ஸமுத்ரங்களையும் எல்லா ஜீவராசிகளையுமே த்வஜாரோஹணத்துக்கு அழைப்பார்.

ப்ரம்மதாள விதி :—கோயிலின் ப்ரஹ்மஸ்தானமாகிற மத்தியிலும், சுற்றியுள்ள திக்பாலகர்களையும் அழைப்பதற்கு தனி முறை

உண்டு. அஸ்த்ரராஜன், விநாயகர் முதலிய தெய்வங்களுடனும், நாட்டியப் பெண்கள், இசைக் கலைஞர்கள், வாத்யம் வாசிப்பவர்கள் இவர்களுடன் அஷ்ட மங்கள த்ரவ்யங்களுடன் நந்தியிடம் சென்று மீண்டும் ஆசார்யர் 'வ்ருஷபூஜை' செய்ய வேண்டும். பிறகு நந்திக்கருகிலுள்ள மத்ய பலிபீடத்துக்குச் சென்று, அதை மந்த்ர ஜலத்தால் ப்ரோக்ஷணம் செய்து விவரமான பூஜைசெய்து அதன் அதிதேவதையான சிவனை வாத்யங்களின் குறிப்பிட்ட இசையாலும், குறிப்பிட்ட நாட்டியங்களாலும், பேரியில் குறிப்பிட்ட தாளத்தை வாசிக்கச் செய்தும் மகிழ்விக்க வேண்டும். பிறகு கோயிலுக்குள் உள்ள எட்டு பலிபீடங்களுக்கு (அல்லது கிராமத்தில் எட்டு திக்குகளிலும் நிறுவப்பட்ட எட்டு பலிபீடங்களுக்கு) ஒவ்வொன்றுக்கும் இவ்வாறே இசை, வாத்யம், நாட்டியங்களுடன் தனித் தனியாக பூஜை செய்ய வேண்டும். எல்லா ஆகமங்களும் மிக முக்கியமாக இப்பலிபீட பூஜையை குறிப்பிடுகின்றன. இது தாந்த்ரிக ரீதியிலும் கலாரஸனை ரீதியிலும் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது. முதன் முதலாக ப்ரஹ்மதாளமே பேரியில் வாசிக்கப்படுவதால் அது ப்ரஹ்மதாளவிதி எனவும், மத்யத்திற்கும் எட்டு திக்குகளுக்கும் உரிய தேவர்களை அழைப்பதால் 'நவஸந்தி-ந்ருத்தம்' 'ஸந்த்யாவாஹனம்' எனவும் கூறப்படும். ஒவ்வொரு திக்குக்கும் தனிப்பட்ட குறிப்பிட்ட தாளமும், ராகமும், நாட்டியமும் உண்டு.

நாட்டியம், இசை இவற்றின் விவரங்கள் :– நவஸந்தி ந்ருத்தம் எனும் கோயில் சடங்கு, இசையையும் நாட்டியத்தையும் அழகாக இணைக்கிறது என்பது பலமுறை கூறப்பட்டது. க்ரியாக்ரமத்யோதிகையில் ப்ரஹ்மதாள விதியைப் பற்றிய விவரமான வர்ணனையில் ப்ரம்மா, இந்த்ரன், அக்னி முதலிய ஒன்பதின்மருக்கும் உரிய பாட்டுகள் உதாரணமாகக் காட்டப் பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றில் ஜதிகளும் ஸ்வரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்பொழுது கிடைக்கும் அந்நூல் பகுதிகளில் பிழைகள் மலிந்திருக்கின்றன. ஆயினும் அதில் உள்ள சில ஸ்தோத்ரப் பாடல்கள் ஜதிபோன்ற இசை அம்சங்கள் சிலவற்றைக் கொண்டவை என்பது வெளிப்படை. உதாரணத்துக்கு 49-50 பக்கங்களில் ஆங்கிலக் கட்டுரையில் கொடுத்துள்ள அக்னி ஸ்துதியைக் காணவும். மத்யம் உள்ளிட்ட ஒன்பது திக்குகளிலும் தனித்தனியாக உபயோகிக்கப்படவேண்டிய ராகங்களையும், நாட்டிய அசைவுகளையும் ஆகமங்கள் விவரிக்கின்றன. அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டுக் கூறப்பட்டாலும், க்ரியாக்ரமத்யோதிகையில் உள்ள (1) திக்குகள், (2) அவற்றுக்குரிய தெய்வம்,

(3) தாளம், (4 ராகம், (5) ந்ருத்தம், (6) பண், (7) இசைக் கருவி முதலிய விவரங்கள் கவனிக்கத் தக்கவை. இவை 51ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த பாகுபாட்டில் சில குழப்பங்கள் காணப்பட்டாலும் சில முக்ய விஷயங்கள் புலப்படுகின்றன.

1. பேரியுடன் வீணை, குழல், ம்ருதங்கம், மத்தளம், சங்கு, காஹலம், மல்லாரி, காம்ஸ்யம், படஹம் முதலியவை வாத்யக் குழுவில் உள்ளவை.

2. ஆசார்யர் மஹோத்ஸவத் தொடக்கத்தை சூர்ணிகையுடன் அறிவிப்பதென்பது ஐந்து முக்ய இசையுடன் சேர்ந்தது: மரம், உலோகம், இவற்றால் ஆகிய வாத்யம், துளைக்கருவி, சங்கு, வாய்-இசை இவை சேர்ந்து பஞ்ச வாத்யம் எனப்படும்.

3. இங்கு ப்ரயோகப் படுத்தப்படும் ந்ருத்தம் பெரும்பாலும் 'சுத்த' வகையைச் சேர்ந்தது. ஜதிஸ்வரங்களும் கொண்டது. பாவம் நிரம்பிய அபிநயங்கள் அதிகமாக உபயோகப்படுவதில்லை. நவஸந்தி ந்ருத்தத்தில் ந்ருத்த புஷ்பாஞ்சலியும், ந்ருத்த கரணங்களைக் காண்பிப்பதும் இதை ஊர்ஜிதப்படுத்துகின்றன

இந்தச் சடங்கு நாட்டியங்கள் இந்நூற்றாண்டின் முற்பகுதி வரை தென்னிந்தியக் கோயில்களில் இடம் பெற்றிருந்தன சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு என்ற நான்கு தஞ்சாவூர் ஸகோதரர்கள் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். இசை உலகில் 'தஞ்சாவூர் நால்வர்' என்று புகழ்பெற்றனர் அவர்கள் இசைக்கும் நாட்டியத்திற்கும் பல்வகைகளில் பெரும் கலைவளம் அளித்தனர். இவர்களுடைய முன்னோர் காலத்தில் இருந்தே இந் நூற்றாண்டின் தொடக்கம் வரை 'நவஸந்தி' இசையும் நாட்டியமும் 'கவுத்துவம்' என்ற பெயரில் தஞ்சைக் கோயிலில் இக்குடும்பத்தால் நிகழ்த்தப்பட்டு வந்தன. இக்குடும்பத்தில் பின் வந்த இருவரான கிட்டப்பாவும், சிவானந்தமும் தமிழில் நவ ஸந்தியின் ஒன்பது கவுத்துவங்களையும் விநாயகர், ஸுப்ரஹ்மண்யர், திருஞானஸம்பந்தர், சண்டிகேச்வரர், நடராஜர் கவுத்துவங்களையும் இசைக்குறிப்புடன் ப்ரசுரப்படுத்தியுள்ளனர்.

நவஸந்தி கவுத்துவங்களை முதலில் இயற்றியவர் யாரென்று தெரியவில்லை வழக்கம்போல் இவற்றின் முதலிலும் கடைசியிலும் ஜதிகள் உள்ளன. இடையில் குறிப்பிட்ட தெய்வத்தின் வர்ணனையும் அத்தெய்வத்தோடு சேர்ந்த ராகம், தாளம், நாட்டியம்

முதலியவையும் ஒவ்வொரு ஸந்திக்கும் காட்டப்பட வேண்டிய முத்ரையும் உள்ளன. இக்கவுத்துவங்கள் க்ரியாக்ரமத்யோதிகையில் ஸந்தி, இசை, நாட்டியயம் முதலிய விவரங்களுடன் ஒத்திருப்பதுடன் அங்கு கொடுக்கப்பட்ட கடவுள் வர்ணனையையும் ஒத்திருக்கின்றன என்பது கவனத்துக்குரியது. உதாரணத்துக்கு இக்கட்டுரையில் 53ம் பக்கத்தில் உள்ள அக்னி ஸந்தி கவுத்துவத்தை நோக்கவும். இதிலுள்ள அக்னிவர்ணனை ஆகமங்களில் உள்ள அக்னியின் த்யான ச்லோகத்துக்கு ஒப்பாக இருப்பது உணரர்பாலது. இசையும் நாட்டியமும் அவ்வாறே இருப்பதை உணர்க.

கொடியேற்றம் :– எல்லா தேவதைகளையும் அழைத்து ஆவாஹனம் செய்ததில் த்வஜாரோஹணம் செய்வதற்கு எல்லாம் ஸித்தமாகி விடுகிறது. மங்கள வாத்யங்கள் யாவும் முழங்க, ஆசார்யர் வ்ருஷ மூல மந்த்ரத்தைச் சொல்ல, கொடி உயரத்திலுள்ள பலகை வரை ஏற்றப்பட்டு அங்கு உறுதியாகப் பிணைக்கப்படுகிறது. நீண்டு மிகுந்த கயிறும் தர்ப்பைப்பிரியும் த்வஜஸ்தம்பத்தில் வலமாகச் சுற்றிக் கட்டப்படுகின்றன. ஸ்தம்பம் துணியால் சுற்றப்பட்டிருக்க, ஸ்தம்பத்தின் அடிப்பகுத்துக்கு நடு 'வ்ருஷப கும்ப'த்திலுள்ள நீரால் ப்ரோக்ஷணம் செய்யப்படுகிறது. தண்டத்தின் அடியிலுள்ள தாமரை ஆஸனத்தின் எட்டு தளங்களும் எட்டு வ்ருஷ - வித்யேச்வர கும்பங்களில் உள்ள நீரால் முறையே தெளிக்கப்படுகின்றன. பிறகு வாஸனைத் திரவியங்களையும் நைவேத்தியம் முதலியவற்றையும் மீண்டும் அளிக்க வேண்டும் இதனாலேயே த்வஜாரோஹணம் நிறைவுபெறும்.

உத்ஸவத்தின் பத்து நாட்களிலுமே வ்ருஷ பூஜையும் த்வஜஸ்தம்ப பூஜையும் செய்யப்பட வேண்டுமென்று நூல்கள் விதிக்கின்றன. இது வ்ருஷபத்தின் ஜீவந்யாஸத்தையும் த்வஜஸ்தம்பத்தில் சிவதத்வத்தையும் உறுதிபடுத்துவதாகும்.

மறு நோக்கும் முடிவுரையும் : த்வஜாரோஹணச் சடங்குகளை நோக்கும்போது, அணுவான ஜீவாத்மாவின் மந்த்ர(வித்யா)-தேஹமும், உலகம் யாவுமடங்கிய சிவனின் வித்யாதேஹமும் பலவிதத்தில் ஒரே மாதிரியானவை என்பது காணப்பட்டது. சிவதத்வம் வ்ருஷபத்தில் மட்டுமல்லாமல், கும்ப ஜலத்திலும் அக்னியிலும் கூட வ்யாபித்திருப்பதுப உணரப்பட்டது. இவை யாவுமே ஆத்ம, வித்யா, சிவ தத்வங்களாகப் பகுக்கப்படுவது, அஷ்டமூர்த்தி என்ற கருத்து, மூர்த்தி - மூர்த்தீச்வர பூஜை

பிறகு நாடீ ஸந்தானத்தின் மூலமாகவும் ஸம்பாத ஹோமத்தாலும் பூர்ணாஹுதியுடனும் மூன்று அதிஷ்டானங்களிலுமுள்ள வ்ருஷபம் ஒன்ருக்கப்படுவது, என்பதெல்லாம் இதையே வெளிப்படுத்துகிறது. ஆயினும் கருவரையிலுள்ள 'ஸாதாக்யம்', அல்லது 'ஸதாசிவ'மாகிய லிங்கத்திற்கும், வெளியில் சிவதத்வமாக 'காரண' லிங்கமாக விளங்கும் த்வஜஸ்தம்பத்திற்கும் உள்ள வேற்றுமையையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

அமைப்பில் த்வஜஸ்தம்பம் தண்டத்தில் ஸதாசிவனேயும், அதன் உச்சிப்பகுதியின் பலகையில் ஓரத்தில் நிறுவப்பட்டிருக்கும் வ்ருஷபத்தில் ஜீவனேயும் குறிக்கிறது. த்வஜஸ்தம்பம் எப்பொழுதுமே நெடிதுயர்ந்து நின்று ஜீவனும் சிவநிலேக்கு ஒப்பான ஸாயுஜ்ய நிலேயை அடையும் என்று அறிவிப்பதுபோல் உள்ளது. ஆனல் மஹோத்ஸவத்தைத் தொடங்கும் த்வஜாரோஹணமே சிவநிலேயை எவ்வாறு ஜீவன் அடையமுடியும் என்பதை விளக்குவதாகவும் சாம்பவீ தீக்ஷையாகவும் அமைகிறது. முற்கூறியபடி சடங்குகள் மூலமாக எவ்வாறு பசு (கட்டுப்பட்ட ஜீவன்) பதியின் அருள்பெற்று அதனுல் சிவதீக்ஷைக்குத் தகுந்தவனுகி, தீக்ஷையைப்பெற்று, மேலும் உயரிய ஆன்ம நிலேக்கு ஏற்றப்பட யோக்யதை பெறுகிருனென்பது விளங்குகிறது. கொடியை ஏற்றுவதற்கு பயன்படும் கயிறே ஆண்டவனின் அருளேக் குறிக்கிறது. இறையருளுடன், ஜீவன் மும்மலங்களிலிருந்து விடுபட வேண்டுமென்பதும் அவசியம். பசுமையான தர்ப்பைக் கயிறு ஆணவமலத்தைக் குறிக்கும் அம்மலத்திலிருந்து விடுபட ஒரே வழி, தகுந்த ஆசார்யனிடம் தீக்ஷை பெற்று, யோக நிலேயிலிருந்து த்யானத்துடன் பஞ்சாக்ஷரீ அல்லது ப்ராஸாத (சிவ) மந்த்ரத்தை ஜபிப்பதாகும். இந்த யோக - மந்த்ர - த்யானநிலேயையும் உயர்ந்து நிற்கும் த்வஜஸ்தம்பம் உணர்த்துகிறது. ப்ராணுயாமத்தில் முக்யமாக உள்ள ஸுஷும்ஞ நாடியையும் நீண்டு நிற்கும் த்வஜஸ்தம்பம் குறிக்கும்.

ஆகமங்கள் தினமும் செய்ய வேண்டிய பூதசுத்தியில் ஸுஷும்ஞ நாடியின் முக்யத்வத்தை விளக்குகின்றன. தீக்ஷை, கும்பாபிஷேகம் முதலிய காலங்களில் குறிப்பிட்ட மந்த்ரங்களே ஜபிப்பதிலும் ஸுஷும்ஞ நாடியும், இடை, பிங்கலே நாடிகளும், உடலினுள் உள்ள ஆறு யோக சக்ரங்களும் முக்யத்வம் பெறுகின்றன. உமாபதி சிவாசார்யார் ஒருவரே த்வஜஸ்தம்பத்திற்கும் ஸுஷும்னேக்கும் உள்ள ஒப்புமையைக் காட்டுகிருர்:

சுருங்கக் கூறுமிடத்து த்வஜஸ்தம்பம் சைவ ஆகமங்களில் முக்யமாகக் குறிப்பிடப்பட்ட மூன்று பொருள்களான பதி, பசு, பாசம் என்பவற்றையும், மேலும் எவ்வாறு பசு பாசத்தை ஒழித்து இறையருளுடன் சிவனுக்கு சமமான நிலையை அடைய முடியும் என்பதையும் உணர்த்துகிறது.

''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது பழந் தமிழ் வழக்கு. அங்குள்ள எல்லோருடைய மன நிலையையும் ஆன்மீக நிலையையும் கோயிலின் தூய்மை உணர்த்தி வலுவடை-யச் செய்கிறது என்பதே இதன் பொருள். எவ்வாறு கோயி-லின் அமைப்பும் அங்கு நடக்கும் சடங்குகளும் சேர்ந்து தெய்-வீக நிலையை நிறுவுகின்றன என்பது ஆகமங்களிலிருந்து உணரப் படுகிறது. நம் முன்னோர்கள் எவ்வாறு இவற்றில் ஈடுபட்டிருந்-தார்கள் என்பதும் தெரிகிறது.

ஹிந்து கோயில்களின் கட்டமைப்பும் கருத்துக்களும் பாவ-னைகளும் எவ்வாறு த்வஜஸ்தம்பத்தால் குறியீடாக வெளிப் படுத்தப்படுகின்றன என்பதை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஆயினும் இவ்வாராய்ச்சியில் பல தடங்கல்களும் சிக்கல்களும் உண்டு. மூல ஆகமங்களின் சரியான நூற்பதிப்புகள், முக்யமாக காமிகம், காரணம் முதலியவை கிடைப்பதரிதாகவுள்ளன. குறி-யீடாக மட்டும் சில ஆகமங்களில் முக்கிய விஷயங்கள் பல்வேறி-டங்களில் சிதறிக் கிடக்கின்றன இக்காலத்தில் நடைமுறையில் கோயில் சடங்குகளும் மிகச் சுருக்கமாக உள்ளன.

நன்றியுரை: இந்நிலையில் எனக்கு சைவ ஆகம வித்யையில் குரு-வான ஸ்ரீ K. A. ஸபாரத்னம் சிவாசார்யர் நுண்புலமையும், ஆய்வு மனப்பான்மையும் ஒருங்கிணைந்த கிடைத்தற்கரிய சான்-றோர் ஆவார். மேலும், சைவ ஆகமச் சடங்குகளிலும் மிகுந்த பற்றும் நம்பிக்கையும் உள்ளவர். என்னுடைய பல ஐயங்களைத் தீர் பதுடன் விமர்ச ரீதியில் எழுந்த கேள்விகளுக்கும் தகுந்த விடை அளித்தவர். அவருடைய இடையறாது உதவியின்றி இவ் வாராய்ச்சிக் கட்டுரை(முதலில் சருத்தரங்கில் என்னால் அளிக்கப் பட்டது) இப்பொழுது மறு பரிசீலனையுடன் வெளிவருவதென்பது இயலாது. அவருக்கு நான் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

INDEX

(for the English Study)

---

* S = Sanskrit

---

* T = Tamil

* Dh. St. = Dhvaja-Stambha